## யாழ் குடாவில் தாக்குதல் நடத்த படைகள் தயார் நிலையில்?

(கொழும்பு)

யாழ். குடா நாட்டில் இராணுவ தாக்குதல் ஒன்றை எவ்வேளையிலும் படையினர் ஆரம்பிக்கலாமென கொழும்புச் செய்திகள்நேற்றிரவு தெரிவித்தன,

இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 04 இதழ் 191

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 20—08—1992

## யாழ். மாவட்டத்தில் ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் இன்று காலை 7 மணி முதல் மறுஅறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவதாக கூட்டுப படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்த விமானங்கள் பலாலி விரைவு

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியிலிருந்துநேற்று ஐந்துக்கும் மேற்பட்ட யுதத விமானங்கள் பலாலி முகாமுக்குச் சென்றுள்ளன.

யாழ். குடாவில் தாக்குதல் ஒன்றை ஆரம்பிக்கும் முகமா

(4ம் பக்கம் பார்க்க)

## ★ அடக்குமுறைகளைஎதிர்த்து

# அரசுக்கு எதிராக கொழும்பில் பத்திரிகையாளர்கள் கிளர்ச்சி

## தலைநகரில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தெற்கில் பத்திரிகையாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறைகளையும், கெடுபிடிகளையும் தாக்குதல்களையும் கண்டித்தும், பாதுகாப்பு உத்தரவாதம் கோரியும் கொழும்பில் நேற்று உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினர்கள்.

ஐந்துக்கும் மேற்பட்ட பத்திரிகையாளர் சங்கங்கள இந்த பேரணியை ஒழுங்கு செய்திருந்தன இப்பேரணியில் உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்களென சுமார் 300 பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர்

கடந்த 20 வருடங்களாக பத்திரிகையாளர்கள் பல இன்னல்களை அனுபவிப்பதாகவும் அண்மைக் காலங்களில் சிலர்

(4ம் பக்கம் பார்க்க)

## "யுத்த செய்திகளை வெளியிட உரிமை உண்டு"

(கொழும்பு)

வடக்கில் தற்போது நடைபெறும் யுத்தம் பற்றிய பூரண செய்திகளை சுதந்திரமாக எழுதும் உரிமை பத்திரிகையாளர்களுக்கு உண்டு. என்று இலங்கை வெளிநாட்டு பததிரிகையார் சங்கத்தைச் சேர்ந்த லூசியன் ராஜ கருணாநாயக்கா தெரிவித்தார்.

நேற்று மாலை கொழும்பு புதிய நகர மண்டபத்தில நடைபெறற பததிரிகையாளர்களின் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது.

யுததம் பற்றியும் பாதுகாபபு படையின் உயர் பீடங்களைச் சேர்ந்த அதிகாரிகளை பற்றியும் சிறப்புரிமைகள்

(4ம் பக்கம் பார்க்க)

## யுத்தமுனைச் செய்திகளை அரசு இருட்டடிப்பு செய்ய முயற்சி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் யுத்த முனைச் செய்திகளை இருட்டடிப்பு செய்ய அரசு முயல்வதாக கடும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது:

யுத்தமுனைச் செய்திகளை தெற்கில் பத்திரிகைகள் துருவித்துருவி வெளியிடுவதால் அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்படுவதாகவும் பல உண்மைகள் மக்களுக்கு தெரிய

(4-ம் பக்கம் பார்க்க)

## 'அத்த' காட்டூனிஸ்ற் மீது கத்திக் குத்து

(கொழும்பு)

'அத்த' பத்திரிகை காட்டூனிஸ்ட் ஜவ்ரி யூனூசை கொல்வதற்கு 22 பேர் அடங்கிய கோஷ்டியொன்று அவரது வீட்டுக்குள் புகுந்து கத்தியால் குத்தி அவரை காயப் படுத்தியது.

பிரேமதாச பற்றிய காட்

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்தவிமான கொள்வனவிற்கு விமானப்படை வற்புறுத்து

(கொழும்பு)

இலங்கைவிமானப்படைக்கு யுதத ஹெலிகொப்டர்கள் உட்பட யுதத விமானங்களை கொள்வனவு செய்யுமாறு விமானப்படை தளபதி ஏயர் வைஸ் மார்ஷல் டெரறன்ஸ் குணவர்த்தன அரசை தொடர்ந்தும் வற்புறுத்தி வருகிறார்.

இது தொடர்பாக விமானப் படை அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பிரதமருமான திரு. விஜயதுங்கவை கடந்த சில தினங்களுக்கு முன் சந்தித்து அவசர கோரிக்கையை விடுத்துள்ளது.

ஆறு 'ஹேர்குலிஸ்' போக்குவரத்து விமானங்களை வாங்கும் கோரிக்கையை அரசு நிராகரித்ததையிட்டும் விமானப்படையினர் கவலை தெரிவித்துள்ளனர்.

குறைந்த பட்சம் உடனடியாக பத்து யுத்த விமானங்களாவது கொள்வனவு செய்ய வேண்டுமெனவும் மேற்படி குழு பிரதமரை வற்புறுத்தியுள்ளதாம். (சி)

## பல்கலைக்கழக அனுமதி புதிய திட்டம் வகுப்பு

(கொழும்பு)

இவ்வாண்டுக்கானபல்கலைக் கழக அனுமதியில் எவருமே பாதிக்கப்படாதிருப்பதை உறுதி செய்யும் வகையிலான புதிய திட்டமொன்றை வகுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாடாளுமன்றத்தில் நீதி, உயர்கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் தனியார் பல்கலைக் கழகம் அமைக்க இடமளிக்கப்பட மாட்டாதென்று

(4-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்துள் தாக்குதல் பாதுகாப்பு அமைச்சு விசாரணை செய்யும்?

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையை உள்ளடக்கிய பாதுகாப்பு வலயத்தினுள் மண்டைதீவு இராணுவத்தினர் கண்

4ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேசும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டு வருகிறது

(கொழும்பு)

இனப்பிரச்னை தீர்வுக்கு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபடும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டு வருவதாக கொழும்பிலுள்ள அரசியல் அவதானிகள் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மோசமாகி வரும் யுத்தச் செலவினம், பொருளாதார நிலையில் பெரும்வீழ்ச்சி, படை தளபதிகளின் இழப்பு மற்றும் புலிகளின் புதிய உத்தித்தாக்குதல்களே அரசைஇவ்வாறான தொரு நிலைக்கு தள்ளியுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அடுத்து இராணுவம் மேற்கொள்ள முனையும் படை நடவடிக்கையில் புலிகள் பலத்த அடியை படையினருக்கு கொடுப்பார்களானால் அது இராணுவத்தின் தற்போதைய நிலையை மேலும் மோசமாக்கும் என்றும், சமாதானத் தீர்வை மேலும் வலியுறுத்தும் எனவும் கூறியுள்ளனர். (சி)

## $3\frac{1}{2}$ லட்சம் பிள்ளைகள் பட்டினியால் பலி

(மொகடிசு)

பட்டினியின் கொடுமையால் வாடுகின்ற சோமாலியாவில் 5 வயதுக்குக் குறைந்த சுமார் மூன்றரை

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### முடக்கொத்தான் குளிகை

முடக்கொத்தான் இலையில் தயாரித்த WELPENELA Capsules கிடைக்குமிடம் எஸ்.ரி மெடிக்கல்ஸ். ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்- (சி-6677)

### புலமைப் பரிசில் பரீட்சை

(ஆண்டு 5)

எமது நிறுவனத்தால் வெளியிடப்பட்ட மாதிரி வினாத்தாள்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம். தொகையாகப்பெறும் கல்வி நிலையங்களுக்கும் பாடசாலைகளுக்கும் விசேஷ சழிவு உண்டு புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி,யாழ்ப்பாணம், (சி-6700)

### விற்பனைக்கு

கந்தபுராணம், உற்பத்தி காண்டம் உரையுடன், அறுபடை வீடுகளின் கந்தன்புகழ் (சஷ்டி) கவசம் ரூபா 9/50, கிடைக்குமிடம், ஸ்ரீகாந்த் புத்தகசாலை. நல்லூர். ஸ்ரீசாந்தா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் (எ-2371)

### அதிர்ஷ்டம் அழைக்கிறது

எத்தகைய தீராத கஷ்டங்களும் நீங்கி சாந்தியடைய சாதகத்துடன் வாருங்கள். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீசக்தி கணேச உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம் (ஸ்ரீகைலாச பிள்ளையார் கோவில் சந்தி). 96, கோவில் வீதி, நல்லூர். (சி 6701)

### நல்லை ஆதீனத்தில் பாலாஜி

புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் ஈழத்து எழுத்தாளர்களின் நாவல்கள், பக்தி பரவசமூட்டும் சமய புத்தகங்கள், இந்திய நாவல்கள் மற்றும் பல பாலாஜி புத்தகசாலை, நல்லைஆதீனம், நல்லூர். (எ-2373)

### நூல் கண்காட்சியும் விற்பனையும்

ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகலவித மான இந்திய. இலங்கை தமிழ், ஆங்கில, சமய, விஞ்ஞான கலை இலக்கிய,சோதிட நூல்களைதெரிவு செய்யுங்கள். ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக பருத்தித்துறைவீதி, நல்லூர். (எ2335)

### இலவச திருமண சேவை

27 வயது. அத்தம், செவ்வாய் 7, கிரகபாவம் 23, பிரான்ஸ் மணமகனுக்கு மணப்பெண்தேவை. பெண்ணை அழைக்கலாம். சகல துறைகளில் மணமக்கள் உண்டு. சந்திப்பு ஞாயிறு காலையில் து விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (சி-6698)

### நீமியா உரம்

நீமியா உரம் நெற்பயிருக்கு சிறந்த அடிச்கட்டுப் பசளை எனக்கண்டறியப்பட்டுள்ளது. வளர்ச்சியின்போது பூச்சி புழுக்களிலிருந்து பாதுகாப்பு, அதிகரித்த விளைச்சல் கிலோ ரூபா 15/-. 20கிலோ பக்கற் ரூபா 260/-. அண்ணா கோப்பி சடைகளிலும் கிடைக்கிறது. மில்க்வைற். [சி-2374]

### சோதிடம்

Anpugee, Shyanbugee ஆக 30-06-1992லிருந்து தனியாக இயங்குகின்றது. புதியவர்களுக்கு, நண்பர்களாக விருந்தினர்களாக பட்டுமே சோதிடம் சொல்லித்தர முடியும். 9-9-1992இற்கு பின்னர் 'சோதிடமற்ற புதியகலை'' Russiva, 510, ஆஸ்பத்திரி வீதி, யாழ். நகர். (சி-6703)

### சேவை

சகல வசதிகளும் கொண்ட வீடு ஒன்று நீர்வேலி மத்தியில் உண்டு மச்சம் மாமிசம் கூடவையில்லாத ஒரு சிறுகுடும்பம் வசிக்கலாம். அல்லது பல்கலைக்கழகத்தில் அல்லது ஆசிரியர்கலாசாலையில் படிக்கும் மாணவிகள் எத்தனை பேராணாலும் இருக்கலாம் சகல போக்குவரத்துக்கு உதவிகளும் செய்துகொடுக்கலாம். 1-9-92ன் பின் நேரில் வரவும். க. ஏரம்பமூர்த்தி. நீர்வேலி மத்தி, நீர்வேலி. (சி-6705)

### கண்டெடுக்கப்பட்டது

சிவசோதி நாகராசா இல. 95, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்பவரால் தங்கச்சங்கலி கண்டு எடுக்கப்பட்டது. இதை தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரத்துடன் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (சி-6709)

### நல்லூர் தெய்வீக இசை அரங்கு

இன்றைய இசை நிகழ்ச்சி
பாட்டு:
யசோதா செல்வராசா.
வயலின்:
ஆர். எஸ் கேசவமூர்த்தி
மிருதங்கம்:
கே. கண்ணதாசன்

## இராசி பலன்

20-08-1992
வியாழக்கிழமை
(தமிழுக்கு ஆவணி 4)

ஸப்தமி மு இ. 11-36 வரை பரணி மு இ 9 26 வரை சித்தயோசம இராகுகாலம் பகல் 1-35 முதல் 3 05 வரை சுபநேரம் காலை 7-35 முதல் 9-05 வரை:

மேடம்: பிணி அகலும், பகை வெல்லும், கௌரவச் சிறப்பு.

இடபம்: மருத்துவச் செலவு, மறைமுக மனஸ்தாபம். ஆத்திரம்

மிதுனம்: பணியில் உற்சாகம், பண வரவு, கடித உறவு.

கடகம்: புதியமுயற்சி, விருந்துண்ணல், காரியசித்தி.

சிங்கம்: முன்கோபம், பிரணபயம், புதிய பிரச்சனை

கன்னி: அதிகாரிகள் பயம் அகால போஷனம், மனச்சுமை.

துலாம்: காரிய தாமதம், தெய்வ வழிபாடு, கடன் வரவு

விருச்சிகம்: சுபகாரியம் பெண்நன்மை வாக்குவன்மை.

தனுசு: வாக்குவாதம், பணியாள் கஷ்டம், வீண் கவலை.

மகரம்: மனத்தாங்கல், அநாவசியச்செலவு, நண்பர் பகை.

கும்பம்: நல்லபெயர் நாணயம், தொழில் விருத்தி

மீனம்; குடும்ப கருத்து மோதல், உறவினர் பகை, வெறுப்பு.

— ஜோஸ்யர்

## பீரங்கித் தாக்குதல்

(பண்டத்தரிப்பு)

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு 9 மணியளவில் காரைநகர், சுழிபுரம் கடற்பிரதேசத்தில் கடற்படைக் கப்பலில் இருந்து தரைப்பகுதியை நோக்கி பலத்த பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ள பட்டது.

இதேவேளையில் கடந்த இரு தினங்களாக ஹெலிகொப்டர்கள் மாதகல், இளவாலை, பண்டத்தரிப்ப பகுதிகளில் அடிக்கடி வானில் பறந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டன, (72 ..)

### அச்சம் அகற்று

அஞ்சிப் பயந்து அகதிகளாய் ஓடாமல்
கெஞ்சுகிறோம் கண்ணே தெய்வமுனைத்-தஞ்சமளி
காக்கக் கடனுனக்கு கந்தா நல் லூரானே
ஆக்கமருள் அச்சம் அகற்று.

சி. இராசரத்தினம்

[இன்று நல்லூர்க்கந்தசுவாமி கோவில் 18ம் திருவிழா]

# குடிசை எரிந்து சிறுவன் பலி

(புலோலி)

குடிசை வீடு ஒன்று தீப் பற்றி எரிந்தபோது அகற்குள் நித்திரைகொண்டிருந்த நான்கு வயதுச் சிறுவன் ஒருவன் தீயால் எரிந்து மரணமானான்

இப்பரிதாபச் சம்பவம் அல்வாய் வத்தனை என்ற இடத்தில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் நடைபெற்றது

இச்சம்பம பற்றி தெரிய வருவதாவது:

குடிசை தீப்பற்றிய வேளையில் இரணைப் பிள்ளைகளில் ஹரிபால் என்ற சிறுவன் அதே குடிசையில் நித்திரையில் இருந்தபோது அத தீயால் எரிந்து மரணமானான்.

மற்றைய சிறுவன் வெளியே நின்றமையால் உயிர் தப்பினான்

தண்ணீர் அள்ளிச்சென்ற சிறுவனின் தாயார் கிணற்றடியிலிருந்து வீடு திரும்புவதற்கிடையில் குடிசை எரிந்து முடிந்ததுடன் அருகிலுள்ள மற்றொரு குடிசையும் தீப்பற்றி எரிந்து நாசமாகியதைக் கண்டனர். (61-இ)

## கரபந்தாட்டப் போட்டி

(சாவகச்சேரி)

லெப்டினன் சேணல் சூட்டி, லெப்டின் கேணல் டேவிட், சப்டன் நேமி, வீரவேங்கை சுகந்தன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக செம்பியன்பற்று லெப். கேணல் டேவிட் இடம் பெயர்ந்தோர் முகாமில் திருமலை இடம்பெயர்ந்த மக்களால் கடந்த 15-ந் திகதி கரபந்தாட்டப்போட்டி ஒன்று நடாத்தப்பட்டது.

அனைத்து இடம்பெயர்ந்தோர் விளையாட்டுக்கழகங்களும் பங்குகொண்ட இக்கரபந்தாட்டப் போட்டியில செம்பியன்பற்று வீரவேங்கை சுகந்தன் விளையாட்டுக்கழகம் மட்டுவில் கப்டன் ஜகன் விளையாட்டுக்கழகம் முறையே முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்று வெற்றிக் கேடயங்களைப் பெற்றுக் கொண்டன.

இவ்வைபவத்தில் வடமராட்சி கிழக்கு கடல்புலிகள் பொறுப்பாளர் மணிமாறன், வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதியாளர் மயூரன். திருமலை சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் பிரதிநிதி திரு. நல்லையா, தயா ஆகியோர் சிறப்புரையாற்றினர். (155-அ)

## அலவன்ஸ் அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

குடும்பநல சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் சப்பாத்து அலவன்ஸ் டியை 300 ரூபாவாக அதிகரிப்பு செய்துள்ளது என்று கொழும்பிலுள்ள சுகாதார, மகளிர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பான சுற்று நிருபம் ஒன்று சகல பிராந்திய சுகாதார அலுவலகங்களுக்கும், மற்றும் அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. குடும்பநல சேவையாளர்களுக்கு இதுவரை காலமும் வருடாந்தம் சப்பாத்துபடியாக 200ரூபா வழங்கப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது. (72-இ)

## வீடமைப்பு நிவாரணம்

(புலோலி)

பருத்தித்துறை பிரதேசப் பகுதியில் வீடமைப்பு நிவாரணத்தைப் பெற 3 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (61-இ)

## படிவங்கள் இல்லை

(மானிப்பாய்)

காணமல் போனவர்கள் சம்பந்தமான விபரங்களைப் பதிவு செய்யும் படிவங்கள் யாழ். செயலகத்தில் முடிவடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [71]

## இலவச தையல் பயிற்சி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. யுவதிகளின் நலன் கருதி இலவச தையல் பயிற்சி நெறியொன்றை எதிர்வரும் 22-ம் திகதி தொடக்கம் ஆரம்பமாகவுள்ளது.

இந்த இலவச தையல் பயிற்சி நெறியில் பங்குபற்றி பயிற்சிபெற விரும்பும் யுவதிகள் தங்கள் விண்ணப்பங்களை பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. அலுவகத்தில் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகின்றது.

இப்பயிற்சி நெறி ஒரு வருடகாலம் நடைபெறும் என்றும் பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது. [72-இ]


# கிறிஸ்து சேவ ஆச்சிரமம்

மருதனமடம் - சுன்னாகம்

## 53வது ஆண்டு விழா

(ஆவணி) ஆகஸ்ட் 21வெள்ளிக்கிழமை 1992

நிகழ்ச்சி நிரல்

காலை 7-00 மணி பரிசுத்த நறகருணை ஆராதனை
காலை 9-00 மணி தோத்திர ஆராதனை
மு. ப. 11-00 மணி கலந்துரையாடல்
ந. ப. 12-00 மணி மன்றாட்டு செபம்
பி. ப. 3-30 மணி பகிரங்கக் கூட்டம்

இவ்விழாவிற்கு உங்களை அன்புடன் அழைக்கிறோம். உங்கள் நண்பர்களையும் அழைத்து வாருங்கள்.

வண. சேவக் சாம் T. அல்பிரட்
(சாம் அண்ணை)

(எ-6679)



# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளை, தலைமையகம்

## வலி. வடக்குப் பிரிவு

## இடைக்கால நிர்வாக நியமனம்

19-08-92 புதன்கிழமை தொடக்கம் 30-08-92 ஞாயிற்றுக்கிழமை வரை வலி. வடக்குப் பிரிவிற்கு புதிய இடைக்கால நிர்வாகம் யாழ் கிளை இடைக்கால நிர்வாகத்தால் நியமிக்கப்பட்டுள்ளது என்பதையும் இவர்களே வலி. வடக்குப் பிரிவு கடமைகளையும் தேர்தல் சம்பந்தமான விடயங்களையும் கவனித்து வருவார்கள் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

[செஞ்சிலுவைச் சங்க சேவையில்
தலைவருக்காக
(இடைக்கால நிர்வாகம்)

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

10-08-92

(ஏ-2375)

## பேச்சுவார்த்தை மூலம்
# இனப்பிரச்னைக்கு தீர்வுகாண 25 அமைப்புகள் கோரிக்கை

[லண்டன்]

இலங்கையில் மனித உரிமை மீறப்படுவதையும் அது தொடர்பாக வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நிறுத்தி சம்பந்தப்பட்ட அனைவரையும் பேச்சுவார்த்தைக்கூடாக பிரச்னைக்கு தீர்வுகாணுமாறு இருபத்தைந்து சர்வதேச அமைப்புக்கள் ஐ. நா. அவை மனித உரிமைகள் ஆணைக் குழுவை வலியுறுத்திக் கேட்டுள்ளன.

இவ்வமைப்புக்கள் விடுத்துள்ள கோரிக்கைகளில் வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்தினால் ஏற்படும் மனித அழிவு பற்றியும் நாம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். இந்த யுத்தத்தினால் பல்லாயிரக்கணக்கானோர் மடிந்தும், பத்துலட்சத்துக்கு அதிகமானோர் அகதிகளாகவும் ஆகியுள்ளனர். 1990 ஜூன் மாதத்தில் இருந்து வடபகுதிக்கு ஒரு பொருளாதாரத் தடையை இலங்கை அரசு நடைமுறைப்படுத்திவருகின்றது மேலும் கேள்வியற்ற முறையில் வடக்கு-கிழக்கு மக்கள்மீது விமானக்குண்டு வீச்சையும் இலங்கை அரசு நடாத்திவருகின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எஸ்-ரி)

## அனாதை சிறுவர்களுக்கு ஜேர்மனியிலிருந்து உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அனாதைச்சிறுவர் நிலையங்களை பராமரிப்பவர்கள் உடனடியாக யாழ் அரசாங்க அதிபரிடம் தமது விபரங்களைத் தெரிவிக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

ஜேர்மனியிலுள்ள தமிழர்கள் அனாதைச் சிறுவர்களுக்கு என சேகரித்த பணத்தை யாழ் மாவட்டத்திலுள்ள அனாதைச் சிறுவர் நிலையங்களுக்கு அனுப்புவதற்கு வேண்டிய விபரங்கள் இல்லாமையினாலேயே யாழ் அரச அதிபரின் உதவியை ஜேர்மனியிலிருந்து வெளியாகும் ''மண்'' சஞ்சிகையின் ஆசிரியர் வ. சிவராஜா நாடியுள்ளார். (வி)

## சீருடைகள் ஊழியர்களுக்கு

[பண்டத்தரிப்பு]

யாழ். சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கு இவ்வருடத்திற்கான உத்தியோக சீருடைகள் இவ்வாரம் தொடக்கம் வழங்கப்பட்டுவருகின்றன. (72)

## அகதி முகாம்கள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் அகதிகளுக்காக புதிய அகதி முகாம்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை அகதிகளுக்கான ஐக்கியநாடுகளின் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர் (59-இ)

## செஞ்சிலுவைச்சங்க தலைவர் கொழும்பு பயணம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ் கிளையின் தலைமையக இடைக்காலத் தலைவர் திரு ஏ. சி செபநாயகம் தலைமைச் சங்கத்தினால் கொழும்புக்கு அவசரமாக அழைக்கப்பட்டுள்ளார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் தலைமையகம், தற்போது பெரும் நிதிநெருக்கடியில் இருப்பதாகவும் அங்கு வேலைசெய்யும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கே தற்போது பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேசமயம் முன்னைய நிர்வாகம் தற்போதைய இடைக்கால நிர்வாகத்திடம் இதுவரை எந்தவொரு தஸ்தாவேஜுகளையும் ஒப்படைக்கவில்லையென்றும் கூறப்படுகின்றது. (வி)

## விசாரணை

(கொழும்பு)

கொக்கட்டிச்சோலையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக 20 இராணுவத்தினர் மீது விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. (கே)

## 17 எம். எல். ஏக்கள் மீது ஜெயலலிதா ஆவேசம்!

[புதுடில்லி]

ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி அ. தி. மு. க. எம். எல். ஏக்கள் 17 பேருக்கு விருந்தளித்த சம்பவம் தற்போது பூதாகரமாகியுள்ளது.

அண்மையில் தமிழகம் வந்தபோதே டாக்டர் சுப்பிரமணியசுவாமி இவ்வாறு 17 எம். எல். ஏக்களை அழைத்து விருந்தளித்தமை அ. தி. மு. க. தலைவர் ஜெயலலிதாவிற்குக் கடும் சினத்தை ஏற்படுத்தியுள்ளதாம்.

இதேவேளை இவ்வாறான தொரு விருந்தில் தாங்கள் கலந்துகொள்ளவில்லை என்றும் இச்செய்தியில் எதுவித உண்மையுமில்லையென மேற்படி 17 எம் எல் ஏக்களும் மறுப்புத் தெரிவித்துள்ளனர். (சி)

## இன்றைய உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அரியாலை ச. ச. நிலைய மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டிகளின் அரையிறுதி ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

13 வயதுப் போட்டியில், சென் மேரீஸ் கழகத்தை எதிர்த்து சென்னடிசு கழகம் மோதும். 40 வயதுப் போட்டியில் அரியாலை ஐக்கிய கழகத்தை எதிர்த்து சென் நீக்கிலஸ் கழகம் மோதும்.

இதற்கு முன்னர் நடைபெற்ற மற்றுமொரு அரை இறுதி ஆட்டத்தில் சென். ஜேக் கழகமும் பாடும்மீன் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதிபெற்றுள்ளனர்.

இறுதி ஆட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (வ)

## சேலத்தில் பஸ் விபத்து 15 பேர் பலி

[சென்னை]

சேலம் மாவட்டத்திலுள்ள புளியம்பட்டி கிராமத்தில் நேற்றுமுன்தினம் மாலை தனியார் பஸ்ஒன்று கவிழ்ந்து தீப்பற்றிக்கொண்டதில் 15 பேர் பலியானார்கள்.

60 பேர் சென்றுகொண்டிருந்த இந்த பஸ் தீப்பற்றிக்கொண்டதால் பலருக்கு தீக்காயங்கள் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (கே)

## நல்லை ஆதீன 26-வது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன 26-வது ஆண்டு நிறைவு பீடாரோஹண விழா நாளை காலை நடைபெறவுள்ளது.

நிறைவு விழாவையொட்டி ஆதீனத்தில் காலையில் ஸ்நபனாபிஷேகம், கொலுப்பூசை, பட்டணப் பிரவேசம் என்பன இடம்பெறும்.

பகலில் 6 மகேசுர பூசையும், பிற்பகலில் புராண படனம், சமயச் சொற்பொழிவுகள் ஆகியனவும் நடைபெறும். [சி

## 71 குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆனைவிழுந்தான் கிராமத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டின்கீழ் வாழும் 71 குடும்பங்களுக்கும், ஒரு குடும்பத்திற்கு 20 கோழிக் குஞ்சுகள் வீதம் 1,420 ஒரு மாதக் குஞ்சுகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினரால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இம் மக்களுக்கான சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்குமுகமாக கோழிக்குஞ்சுகளை கழகம் விநியோகம் செய்துள்ளது. மேலும் கோழிக்குஞ்சுகளை நல்ல முறையில் பராமரிப்பதற்கு ஏற்றவாறு கோழிக்குஞ்சுக்கான தீவனங்களையும் பராமரிப்புக் கூடுகளையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் வழங்கி வருகிறது. (அ)

## வடக்கு-கிழக்கு மாணவருக்கு இலவச சீருடை

(கொழும்பு)

1993-ம் ஆண்டு பாடசாலை பிள்ளைகளுக்கு சீருடைகள் வழங்கும்போது, வடக்கு-கிழக்கு மாணவர்களுக்கும் அதே காலத்தில் சீருடைகள் வழங்கப்படும். (கே)

# செய்திச்சுருக்கம்

### (உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கிடையில் மூன்றும் தவணைக் காலத்தில் போதை வஸ்து பாவனையை தடுக்கும் நோக்கத்துடன் கட்டுரை ஓவியம் போன்ற போட்டிகள் நடத்தப்படவுள்ளன. [109]

### யாழோசை இசை நிகழ்ச்சி

(நல்லூர்)

யாழோசை மாணவர்களின் இசை நிகழ்ச்சி எதிர்வரும் 24ம் திகதி முதல் 28ம் திகதி வரை நல்லூரில் நடைபெறவுள்ளது. முதல் 4 நாள் நிகழ்ச்சிகளும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திலும் இறுதிநாள் விசேட பக்திப்பாடல் நிகழ்ச்சி மங்கையர்க்கரசி வித்தியாலயத்திலும் மாலை 6 35 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (158)

### பிரதேசசபை இடமாற்றம்

(கொக்குவில்)

இராணுவ நடவடிக்கையில் இடம் பெயர்ந்த அராலி மக்களின் நலன் கருதி அப்பகுதி ப. நோ கூ. சங்கம் பிரதேச சபை ஆகியன இடமாற்றம் செய்யப்படவுள்ளன [135]

### ரதோற்சவம்

(பண்டத்தரிப்பு)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த ரதோற்சவம் நாளை 21ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. தீர்த்த உற்சவம் நாளை மறுநாள் நடைபெறும் (62)

### உழைப்பாளர் சங்கம்

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உரும்பராய் வடக்கு கிராமிய உழைப்பாளர் சங்கம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இச்சங்கம் கிராமத்தில் சுகாதாரத்தையும் சத்துணவையும் பேணுவதற்கேற்ப கல்விக் கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றது. (109)

### இறால். மீன் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வல்லை வெளிநீர்த்தேக்கத்தில் அதிக அளவில் இறால், மீன் போன்றவை பிடிக்கப்படுகின்றன.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெயில் காற்று போன்ற இயற்கை காரணிகளால் மேற்படி கடல் நீரோட்டம் வற்றிதேங்கியுள்ளதால் அதில் பெருந்தொகையான இறால் மீன் போன்றவை தரிக்கின்றன. (51)

### தமிழறிஞர் நினைவுநாள்

(பருத்தித்துறை)

தமிழறிஞர் கந்தமுருகேசனாரின் 27வது ஆண்டு நினைவு நாள் பேருரை தென் புலோலி புற்றளை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினால் புற்றளை மகா வித்தியாலயத்தில் வடமராட்சிகோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. வீ. எஸ். ஏகாம்பரநாதன் தலைமையில் நடத்தப்பட்டது. [52]

### சான்றிதழ் பெற்றார்

(உடுவில்)

சுவாமி விபுலானந்த அடிகளார் நூற்றாண்டு விழாவையொட்டி கொழும்புத்தமிழ்ச் சங்கம் நடாத்திய கவிதை உயர்நிலைப்போட்டியில் ''அடிகளார் நான்மணி மாலை''யை இயற்றிய ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. வை. க. சிற்றம்பலம் பணப்பரிசிலையும், சான்றிதழையும் பெற்றுக்கொண்டார். (109)

### கலந்துரையாடல்

(அரியாலை)

பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர்கள் பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று 20ம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும். (101]

### கோவிலில் திருட்டு

(நெல்லியடி)

துன்னாலை கிழக்கு வெல்லிச் சந்தோட்ட பிள்ளையார் கோவிலில் கடந்த 11ம் திகதி நள்ளிரவு மூலஸ்தானம் உடைக்கப்பட்டு அங்கிருந்த எவர்சில்வர் பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக ஆலய நிர்வாகம் காவல்துறையில் புகார் செய்துள்ளது. (160)

### திருக்குறள் மனனப்போட்டி

(புலோலி)

மேலைப் புலோலி ஆத்தியடி இளைஞர் கல்வித் தேர்ச்சிக் சங்கம் எதிர்வரும் நவராத்திரி தினத்தையொட்டி மாணவர்களிடையே தேவவாரம், திருக்குறள் மனனப் போட்டிகள் நடத்தவுள்ளது. [61]

### பயிற்சி வகுப்பு

(அரியாலை)

நாவற்குழி 'லவனிதா' குடியிருப்பில விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் தீவகப் பிரிவினரால் அங்குள்ள யுவதிகளுக்கென பன்ன வேலைப் பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டு வருகின்றது. இப் பயிற்சி வகுப்பில் தற்போது இருபத்தைந்து யுவதிகள் பயிற்சிபெற்று வருகின்றனர். (101]

### அறிவுப் போட்டி

(திருநெல்வேலி)

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு யாழ். மாநகரசபையினரால் நடாத்தப்படும் சமயப் போட்டிகள் இம் மாதம் முறையே 22-ம், 23-ம், 26-ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் முறையே பண்ணிசை கட்டுரை பேச்சு ஆகிய போட்டிகளே யாழ். மங்கயர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும் (157]

### புதிய அதிபர்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆரமப பிரிவுக்குப் புதிய அதிபராக செல்வி செல்லமணி செல்லத்துரை நியமிக்கப்பட்டுள்ளார். 139]

### நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாட்களாக வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பு ஊசி போடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. சுண்டுக்குளி நல்லூர். அரியாலை, கொட்டடி, கொழும்புத்துறை சின்னக்கடை, பாஷையூர் ஆகிய இடங்களில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

5 நாட்களில் மட்டும் 680 வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. [158]

### மாணவர்கள் கவனத்திற்கு

(கொழும்புத்துறை)

தெல்லிப்பழை, தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளியில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பித்த சகல மாணவர்களும் தமது சுட்டிலக்கங்களை மல்லாகம் கனிஷ்ட வித்தியாசாலையில் எதிர்வரும் 22-ந் திகதி சனிக்கிழமை காலை பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (154-அ)

# பல்கலைக்கழக பேராசிரியர்

# கொலை சதியில் குற்றச்சாட்டு

## அரசைக் கவிழ்க்கவும் முயற்சியாம்

(கொழும்பு)

ஐந்து முக்கிய பிரமுகர்களை கொலை செய்யச் சதிசெய்ததாகவும் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு சதி செய்ததாகவும் பேராசிரியர் ஒருவர் மீது வழக்கு தாக்கலாகியுள்ளது.

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக கணிதத்துறை பேராசிரியரான இவர் மீது சட்டமா அதிபர் கடந்த திங்களன்று கொழும்பு உயர்நீதிமன்றில் குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளார்.

இந்தப் பேராசிரியர் ஒரு அதிதீவிர பேராசிரியரென்றும் இவருக்கும் ஜே. வி. பி. யினருக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் பொலிசார் தெரிவித்தனர். (கே-சி)

## மண்டைதீவிலிருந்து தொடர்ந்து ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளையில் யாழ்ப்பாணக் கரையோரப் பகுதியை நோக்கி ஷெல்த் தாக்குதல்களை படையினர் மேற்கொண்டனர்.

இவ்வேளையில் 5க்கு மேற்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்தது. துப்பாக்கி வேட்டுக்களையும் மேற்கொண்டிருந்தனர்.

நேற்று பிற்பகல் ஒரு மணிக்கும் மாலையிலும் மண்டைதீவு முகாமிலிருந்தும் அரியாலை கடலோரப் பகுதி, கொட்டடி, நாவாந்துறை கடலோரப் பகுதியை நோக்கியும் படையினர் ஷெல்த்தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர். (56)

### யுத்த விமானங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களே இவை நேற்று பிற்பகல் 4 மணியளவில் இரு தடவையாக பலாலி முகாமுக்குச் சென்றுள்ளன.

கடந்த சில தினங்களாக பலாலி, காரைநகர் படைத்தளங்களில் போருக்கான பெரும் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### அடக்குமுறைகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்யப்படும், பலர் கொலை பயமுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுமுள்ளனர். ரிச்சார்ட் டி செய்சா முதல் ஜவ்ரி ஜூனுஸ் வரை பல பத்திரிகையாளர் இந்த வன்முறைக்கு இலக்காகியுள்ளனர்.

அரசுக்கும் எதிர்க்கட்சிக்குமிடையிலான ஆட்சிப் போரிலே பத்திரிகையாளர்களே பாதிக்கப்பட்டுள்ளனர். எதிர்க்கட்சி ஊர்வலங்களிலும் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

புலிகளின் கண்ணிவெடியில் உயிரிழந்த படைத்தளபதிகளின் இறுதிச் சடங்குகளில் செய்தி சேகரித்த பத்திரிகையாளர்கள், படப்பிடிப்பாளர்கள் மோசமாக தாக்கப்பட்டதுடன் உடமைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அரசு எதிர்ப்பு பேரணிகளில் திட்டமிட்டே குண்டர்படைகளால் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டு வருவதாகவும் இப்பேரணியில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பேரணியில் சென்றவர்கள், அரசின் காடைத்தனத்தை கண்டிக்கிறோம். செய்திச் சுதந்திரம் வேண்டும் என்ற வாசகங்கள் உட்பட பல சுலோக அட்டைகளை எடுத்துச்சென்றனர்.

'சண்டே ஐலண்ட்' ஆசிரியர் காமினி வீரசகோன் கூறுகையில்; 20 ஆண்டுகளாக கருத்துத்தடை, அவசரகாலச் சட்டம், செய்தி வெட்டு என அப்படி இப்படி அளவற்ற அமுக்கங்களுக்கு வளைந்து கொடுத்த பத்திரிகையாளர்கள் வளைந்தது போதும் இனி முடியாது. இப்போது முறுகி, கிளர்ந்து எழுந்துள்ளனர். இதுவே ஒரு மகத்தான விழிப்புணர்வு என்றார். (சி)

### யுத்தமுனைச் செய்திகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாலுமே இவ்வாறான தொரு முயற்சியில் அரசு ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக வடக்கு கிழக்கில் புலிகளின் கை ஓங்கியிருப்பதாகவும், அரசு படைகள் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுவருவதாகவும்பல பத்திரிகைகள் தெரிவித்ததுடன், படைத் தளபதிகளின் மரணம் பற்றி பல்வேறு வித செய்திகளையும் வெளியிட்டு வருகின்றன. (சி)

### யுத்த செய்திகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கின்றதா என்பதை ஆராய்வது பத்திரிகையாளர்களின் உரிமையாகும் என்றார். (யா-சு-சி)

### யாழ் குடாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளதாகவும் உடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி டி. சில்வா உட்பட படை அதிகாரிகள் பலர் பலாலி முகாமில் இந்த ஏற்பாடுகளைக் கவனித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை படையினரின் புதிய தாக்குதல்களை எதிர்நோக்கும் நிலையில் புலிகளும் தங்களை நன்கு தயார்படுத்தியிருப்பதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன. (சி)

## மிதிவெடியால் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் கடற்கரையோரப்பகுதியில் நேற்று அதிகாலை வேளையில் மீனவரொருவர் கடலில் மிதந்து வந்து ஒதுங்கிய மிதிவெடிக்குள் கால் சிக்கி கால் ஒன்றை இழந்து பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாஷையூர் மகேந்திரபுரத்தைச் சேர்ந்த எஸ் தவம் [28 வயது] என்பவரே ஒரு கால் பாதம் இழந்த நிலையிலும் மறுகால் சிதைந்த நிலையிலும் உள்ளவராவார். [56]

## சர்வகட்சி மாநாடு 81 தடவை கூடியபோது $18\frac{1}{2}$ லட்சம் ரூபா செலவு பிரதமர் கவலை

(கொழும்பு)

சர்வகட்சி மாநாடு 81 தடவை கூடி 18 லட்சத்திற்கு மேல்செலவை ஏற்படுத்தியதேயன்றி கண்ட பயன் ஒன்றுமில்லையென பிரதமர் டி. பி. விஜயதுங்கா நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி மாநாடு 81 தடவை கூடியது. $134\frac{1}{2}$ மணி நேரம் ஆலோசனைகளை நடத்தியது. இவற்றுக்கான முழு செலவு 18 லட்சத்து 40ஆயிரம் ரூபா

இவ்வளவு நேரத்தையும் காலத்தையும் செலவு செய்த மாநாட்டினர் கண்ட பயன் ஏதும் இல்லையென மேலும் பிரதமர் கூறினார்.

தற்போது நாடாளுமன்ற தெரிவுக்குழுவும் இவ்வாறான தொரு நிலையிலேயே செல்வதைக் காணக்கூடியதாயிருப்பதாகவும் விமர்சகர்கள் கூறுகின்றனர். (கே-சி)

## நாராயணன் உபஜனாதிபதி

(புதுடில்லி)

இந்திய உபஜனாதிபதியாக முன்னாள் மத்திய அமைச்சர் கே. ஆர். நாராயணன் தெரிவு செய்யப்பட்டார்.

இத்தேர்தலில் திரு. நாராயணனுக்கு 700 வாக்குகள் கிடைத்ததாகவும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர் ஒரே ஒருவாக்கை மட்டுமே பெற்றார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

192-ம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதி கேரளத்தில பிறந்த இவர் ஆரம்பத்தில் இந்திய வெளியுறவு சேவையில் சேர்ந்து ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, துருக்கி, வியட்நாம் போன்ற நாடுகளில் இந்திய தூதராகவும் பணியாற்றியுள்ளார்.

### பாதுகாப்பு வலயத்துள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூடித்தனமாக நேற்று முன்தினம் காலை மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் ஓர் ஒப்பந்த மீறலாகுமென சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு பொற்சுவான் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கு தாம் அறிவித்துள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடாத்தப்படுமென பாதுகாப்பஅமைச்சு தரப்பில் உறுதியளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

### அத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டூன் படங்கள் 'அத்த' பத்திரிகையில் வெளியிட்ட மைக்கே யூனூஸ் தாக்கப்பட்டார் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் ஒரு திட்டமிட்ட செயல் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சு-சி)

### யாழ். மாவட்டத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கும் பொருட்டே இந்த ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்தது. (சி-க)

## இரிக்கெட்

## இலங்கை அணி 291ஓட்டங்கள்முன்னணியில்

(கொழும்பு)

இலங்கை அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்குமிடையில் கொழும்பு 'சரா' ஸ்ரேடியத்தில் நடைபெறும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதலாவது இனிங்ஸில் 8விக்கெட் இழப்பிற்கு 547 ஓட்டங்களை பெற்றது.

3ம் நாள் ஆட்டத்தில் இலங்கைஅணித்தலைவர் அருச்சுனா ரணதுங்க 127, அஸங்க குருசிங்க-.37 ஓட்டங்களையும் தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் ருமேஷ் கலுவிதாரண ஆட்டமிழகாமல் மிகதுரிதமாக 132 ஓட்டங்களை பெற்றார். இதில் 26 டவுண்டறிகளை பெற்றார்

4வது விக்கெட் ஜோடியாக அருச்சுனா ரணதுங்கவும். அசங்க குருசிங்கவும் இணைந்து 230 ஓட்டங்களை பெற்றதுடன் இலங்கை டெஸ்ட் வரலாற்றில் அதிகூடிய ஓட்டமாக இலங்கை 531 ஓட்டங்களை பெற்றது)

3ம் நாள் ஆட்டநேர முடிவில் ஆஸ்திரேலியா விக்கெட் இழப்பின்றி 26 ஓட்டங்களை பெற்றது. முதல் இனிங்ஸ் 256 ஓட்டம் இன்று ஓய்வு நாள். (சி)

### பல்கலைக்கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் தனது உரையில் கூறினார்.

இதேவேளை இனிமேல் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை வேறாக நடத்தப்படமாட்டாது என கல்விச்சேவைகள் ராஜாங்க அமைச்சர் திருமதி சுனீத்ரா ரணசிங்கா நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார், (கே-சி)

### மூன்றரை லட்சம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லட்சம் பிள்ளைகள் உயிரிழந்துள்ளனர்.

அங்கு சுமார் 135 நிவாரண ஸ்தாபனங்கள் பணி புரிந்து வருகின்றன. உள நாட்டு யுத்தத்துக்கு அரசியல் தீர்வு காணப்படாவிட்டால் தற்போதைய அவசர உதவிகள் மூலம் பட்டினிச் சாவைத் தடுத்து நிறுத்த முடியாமல் போகுமென இராசதந்திரிகள் கூறியுள்ளார்கள்.

சோமாலியாவில் கடந்த பத்து வருடங்களில் மட்டும் சுமார் 20 லட்சம் மக்கள் பசி கொடுமையால் உயிரிழந்துள்ளனர். (சு-சி)

## மரண அறிவித்தல்

### வீ. கிருஷ்ணபிள்ளை

மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த வீரகத்தி சிவகெங்கை தம்பதிகளின் மகன் கிருஷ்ணபிள்ளை 17-08-92 அன்று காலமாகிவிட்டார். இவர் சிவக்கொழுந்துவின் கணவனும் திலகவதி (பேபி). சரோஜாதேவி (கிரிஜா) முன்னியவளை, சி. மகாலஷ்மி (மகா) குகன் ஆகியோரின் தந்தையும் முன்னியவளை அருமையம்மா நாகரத்தினம் (செல்லத்துரை) தேவகுரு, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் மரணச் சடங்குகள் 17-ம் திகதி நடைபெற்றது.

தகவல்: க. கணேஸ்வரன் (மட்டுவில்)

(சி-6704)

### திருமதி றெஜீனா தங்கம்மா மார்ட்டீன்

திருமதி றெஜீனா தங்கம்மா மார்ட்டீன் காலமானார். இவா காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் யேக்கப்பிள்ளை மார்ட்டீன் அவர்களின் அன்பு மனைவியும், சகுந்தலா சேவியர், எம். ஏ. ஆர். செல்வநாயகம் [மதுவரி பரிசோதகர் வவுனியா] நிர்மலா பிறிடி, எம். துரைநாயகம் (ஈழநாடு . எம். மதுரநாயகம், கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆர் எம். சேவியர் [பொது சுகாதார பரிசோதகர் யாழ் பல்கலைக்கழகம்) புஷ்பா செல்வநாயகம், எம். பிறிடி, செல்வதி துரைநாயகம் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற எம். எம். அலெக்சாண்டர் [மட்டக்களப்பு], திருமதி புளோ யோசப், திருமதி பூஷா லூயிஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும்; X. A றஜீந்திரக்குமார், சுகந்தி, சுரேஷ், சுவித்தா, சாமினி, சுதர்ஷனி, நிலாந்திஸி, ஜயந்தன், ஜயந்தா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 3-30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக யாழ கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும.

181. ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரேசன் சந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்:- மா. துரைநாயகம் (மகன்)

(ஏ-2378)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68இல் உள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under License Number B/10335